# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.19/2014

PW1– குணசேகரன் நாள்: 23.04.2025

**4, 5, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் 7வது பக்கத்தில் பொதுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட நகை மற்றும் பணத்திற்கு போதிய ஆவணங்கள் இல்லாததால் அதை பொருத்து நான் பாகம் கேட்கவில்லை என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் நான் அவ்வாறு சொல்லவில்லை. தற்போது சாட்சி அவரிடம் வைத்திருந்த பிரமாண வாக்குமூலத்தின் நகலை நீதிமன்றத்தில் காட்டி அதில் அவ்வாறு சொல்லப்படவில்லை என்று சொன்னால் ஆனால்அதிலும் பக்கம் 7ல் அதே போல் குறிப்பிட்டுள்ளது என்று வாசித்து காட்டவும் சரியென்று ஒப்புக்கொண்டார். நான் பணம், நகை பாகம் வேண்டாம் என்று சொல்லிவிட்டு தற்போது அதிலும் பாகம் கேட்டு வழக்கு நடத்துகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ஏற்கனவே பணம் நகை ஆகியவற்றில் பாகம் வேண்டாம் என்று கூறிவிட்டதால் மீண்டும் அதில் பாகம் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. நகை, பணம் பற்றிய விவரங்கள் தெரியாததால் அவ்வாறு சொன்னேன். என் அப்பா உயிருடன் இருந்தபோது கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ததும், 4, 5 பிரதிவாதிகள் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ததும் எனக்கு தெரியாது. அந்த கூடுதல் எதிர்வழக்குரைக்கு நான் பதிலுரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும். 1ம் பிரதிவாதி என் அப்பா இறந்துவிட்டார். என் அப்பா தாக்கல் செய்த கூடுதல் பதிலுரைக்கு மறுப்பு தெரிவிக்காமல் தற்போது அந்த சங்கதிகளை மறுத்து கூடுதல் வாக்குமூலம் தாக்கல் செய்ய முடியாது என்று சொன்னால் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருக்கும்போது 4ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட், கிரைய பத்திரம் எழுதி கொடுத்தது தெரியும். என் அப்பா எந்த ஆவணமும் எழுதிவைக்காமல்

இறந்துவிட்டார் என்று கூடுதல் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. என் அப்பா உயிருடன் இருந்தபோது 4ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட், கிரைய பத்திரம் எழுதிகொடுத்தது தெரிந்தே நான் ஆவணம் எதுவும் எழுதிவைக்காமல் இறந்துவிட்டார் என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா 1 வது அயிட்ட சொத்தை பொருத்து என் அப்பா குடும்ப தலைவர் என்ற முறையில் கிரையம் பெற்றார் என்று முதல்முறையாக தற்போது தாக்கல் செய்துள்ள கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் தான் சொல்லியுள்ளேன் என்றும் என்னுடைய வழக்குரையிலோ, ஏற்கனவே தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனவே இந்த பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விஷயங்கள் அபிவிருத்தி செய்து சொல்லப்பட்டவை என்றால் சரியல்ல. என் அப்பா இயற்கையான முறையில் இறந்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என் அப்பாவை நான் அடித்து துன்புறுத்தியதாக வழக்கு இருந்தது உண்மை. என் அப்பாவை வழக்கு போட்ட பிறகு தான் அடித்தேன். அவ்வாறு அடித்தடி ஆன பிறகு எனக்கும் என் அப்பாவுக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்று சொன்னால் என் அம்மா இறந்தபோது பேசிக்கொண்டோம். என் அப்பாவின் இறப்பில் சந்தேகம் உள்ளதாக அரும்பாவூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுத்ததன் பேரில் என்அப்பாவின் உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பினார்கள் பிரேத பரிசோதனையில் இயற்கையான முறையில் இறந்ததாக தான் சான்று அளிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் 4ம் பிரதிவாதி சென்னையில் இருந்தார். என் அப்பா இறப்பதற்கு முதல்நாள் 4ம் பிரதிவாதி பெரம்பலூரிலிருந்து சென்னைக்கு கிளம்பிபோனார். சொத்தில் எனக்கு பங்கு கொடுக்கவில்லை என்பதற்காக 4ம் பிரதிவாதி பெயரில் பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருக்கும்போது அவரை அடித்தேன் என்றும், இறந்தபிறகும் அவரது பிரேதத்தை பிரேத

பரிசோதனைக்கு அனுப்பி ஆன்மாவை துன்புறுத்தினேன் என்றால் சரியல்ல. தாவா "அ" அட்டவணை 1 முதல் 9 அயிட்ட சொத்துக்கள் என் அப்பாவின் சுயசம்பாத்தியம் என்றால் பூர்வீக சொத்தை விற்று தான் வாங்கியது. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவருடைய சுயசம்பாத்திய சொத்து என்பதால் அதை எல்லா வகையிலும் பராஜனம் செய்ய உரிமையுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதை கேள்வி கேட்க எனக்கோ மற்ற பிரதிவாதிகளுக்கோ உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா ஆ அட்டவணை சொத்துக்கள் 4, 5 பிரதிவாதிகள் அவர்களின் சுயசம்பாத்தியத்தில் வாங்கியது என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொதுக்குடும்ப சொத்து என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா ஆ அட்டவணை சொத்து 4, 5 பிரதிவாதிகளுக்கு தனிப்பட்ட பாத்தியம் என்பதால் தான் 7, 10, 11 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றும் அதை கேள்வி கேட்க உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய கூடுதல் வாக்குமூலம் ஏற்கனவே சொல்லாத விஷயங்களை மிகைப்படுத்தி சொல்லி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. நகை, பணம் பற்றி நான் ஏற்கனவே என்னுடைய உரிமையை விட்டுக்கொடுத்து விட்டதால் அது பொருத்து மேல்நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா இ அட்டவணை சொத்தில் எந்தவித பாகமும் கிடையாது என்றால் சரியல்ல. அது பொருத்து பரிகாரமும் எனக்கு கிடையாது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய கூடுதல் பிரமாண வாக்குமூலம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளகூடியதல்ல என்றால் சரியல்ல.

<u>13ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

என் அப்பா 4ம் பிரதிவாதியை தன்னுடைய வங்கி கணக்கிற்கு நாமினியாக நியமனம் செய்ததால் என் அப்பாவின் வங்கிகணக்கு தொகை மற்றும் லாக்கர் டெபாசிட் ஆகியவற்றை வங்கிவிதிகளின் படி 4ம் பிரதிவாதியிடம் 13 ம்

பிரதிவாதி ஒப்படைத்துவிட்டார் என்றும், எனவே 13ம் பிரதிவாதியை பொருத்துவழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**(2, 3, 10, 11, 12, 14 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.